SUMMIT FINANCE PLC
Taking you to the top

நகர அலுவலகம், 15, ஸ்டேஷன் வீதி, கொழும்பு 03.
Tel: +94 11 2375408-12 Fax: +94 11 2375411
Email: info@summit.lk Web: www.summit.lk


# நிதிக் கூற்று


EY
Building a better working world

Ernst & Young
Chartered Accountants
201 De Saram Place
P.O. Box 101
Colombo 10
Sri Lanka

Tel : + 94 11 2463500
Fax Gen : + 94 11 2697369
Tax : + 94 11 5578180
eysl@lk.ey.com
ey.com


AL/PATR/AD

## வரையறுக்கப்பட்ட சமிட் பினான்ஸ் பிஎல்சி நிதிக் கம்பனியின் பங்குதாரர்களுக்கான சுதந்திரமான கணக்காய்வு அறிக்கை

### நிதிக் கூற்றுக்கள் பற்றிய அறிக்கை

வரையறுக்கப்பட்ட சமிட் பினான்ஸ் பிஎல்சி தனியார் நிதிக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை இத்துடன் இணைத்துள்ளோம். இவை 2016 மார்ச் 31இல் முடிவடைந்த நிதி ஆண்டின் நிதி நிலைமைகளை உள்ளடக்கியுள்ளன. அத்தோடு, வருட இறுதிக்கான விரிவான வருமானக் கூற்று, பங்கிலாப மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியத்துவமான கணக்கியல் கொள்கை சுருக்கம், ஏனைய விளக்கக் குறிப்புக்கள் என்பனவற்றையும் இது 7 முதல் 50 பக்கங்களுக்குள் உள்ளடக்கியுள்ளது.

### நிதிக் கூற்றுக்கள் மீதான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இலங்கை கணக்கியல் தரங்களுக்கு இசைவாக இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்புக்களாவன: வடிவமைத்தல், தயாரிப்போடு தொடர்புடைய தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பராமரித்தலும், அமுல் செய்தலும், மோசடிகள் அல்லது தவறுகளால் விளையக் கூடிய தவறுகள் எதுவும் அற்ற நிதி அறிக்கைகளின் நியாயமான வெளியீடு, முறையான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தலும் பிரயோகித்தலும், சூழ்நிலைகளுக்கு ஏற்ப நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

### கணக்காய்வாளரின் பொறுப்பு

எமது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்தினை முன்வைப்பது எமது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வுத் தரங்களுக்கு இசைவாக நாம் இந்தக் கணக்காய்வை நடத்தியுள்ளோம். இந்த நிதிக் கூற்றுக்கள் எவ்வித தவறும் அற்றவை என்ற நியாயமான உறுதிப்பாட்டை கணக்காய்வு மூலம் பெற்றுக்கொள்ளத் தக்கதாக நாம் அதனைத் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும் என்பதை இந்தத் தரங்கள் வேண்டி நிற்கின்றன.

கணக்காய்வானது, சோதனை அடிப்படையிலான பரிசீலனை, நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்கள் மற்றும் தொகைகளுக்கு ஆதரவான சான்றுகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளை மதிப்பீடு செய்தல், முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள், அத்தோடு ஒட்டுமொத்த நிதிக் கூற்றை வழங்குவதை மதிப்பீடு செய்தல் என்பனவற்றையும் அது உள்ளடக்கியுள்ளது.

எமது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் ஏற்றவரை கணக்காய்வின் நோக்கத்துக்கு தேவையான சகல விதமான விளக்கங்களையும், தகவல்களையும் நாம் பெற்றுள்ளோம். எனவே, எமது கணக்காய்வானது, எமது கருத்துக்களுக்கான நியாயமான காரணங்களையும் கொண்டுள்ளது என நாம் நம்புகின்றோம்.

### கருத்து

எமது கருத்தின் பிரகாரம், எமது பரிசோதனைகளின் மூலம் தெரியவந்துள்ளதாவது, முடிவடைந்த நிதி ஆண்டில், கம்பனி முறையான கணக்கீட்டுப் பதிவுகளைப் பேணி வந்துள்ளது. அத்தோடு, 2016 மார்ச் 31 இன்படி கம்பனியின் நிதி நிலைமை, நிதிச் செயற்பாடு, காசுப் பாய்ச்சல் என்பன பற்றிய உண்மையான, நியாயமான கண்ணோட்டத்தை இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு இசைவாக நிதிக் கூற்றுக்கள் அளிக்கின்றன

### சட்ட மற்றும் ஏனைய ஒழுங்கு முறை விதிகள் பற்றிய அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 163(2) பிரிவுக்கு கீழுள்ளவைகளை கடைபிடித்தோம்

அ) கருத்து நோக்கம் மற்றும் கணக்காய்வு வரம்புகள் மேலுள்ள அடிப்படையில் குறிப்பிடப்படுகின்றன

ஆ) எமது கருத்துக்கு அமைய:
- கணக்காய்வுக்கு தேவையான சகல தகவல்கள் சரிய கணக்கீடுகள் தகவல் மற்றும் நிறுவனத்திலுள்ள விபரங்கள் பெற்றுக் கொண்டுள்ளோம்.
- 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 151 பிரிவுக்கு இசைவாகவும் நிதிக் கூற்றுக்கள் அமைந்துள்ளன.

Ernst & Young

2016 மே 30
கொழும்பு


Partners: WRH Fernando FCA FCMA M P D Cooray FCA FCMA R N de Saram ACA FCMA Ms. N A De Silva FCA Ms. Y A De Silva FCA W K B S P Fernando FCA FCMA Ms. L K H L Fonseka FCA A P A Gunasekara FCA FCMA A Herath FCA D K Hulangamuwa FCA FCMA LLB (Lond) H M A Jayesinghe FCA FCMA Ms. A A Ludowyke FCA FCMA Ms. G G S Manathunga FCA N M Sulaiman ACA ACMA B E Wijesuriya FCA FCMA

A member firm of Ernst & Young Global Limited


## விரிவான வருமான அறிக்கை
**2016 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடம்**

| | 2016 ரூபா. | 2015 ரூபா. |
|---|---|---|
| வட்டி வருமானம் | 289,589,051 | 289,636,782 |
| வட்டி செலவினம் | (125,889,086) | (131,142,196) |
| **நிகர வட்டி வருமானம்** | 163,699,965 | 158,494,586 |
| கட்டணம் மற்றும் தரகுப்பண வருமானம் | 4,364,084 | 3,172,420 |
| கட்டணம் மற்றும் தரகுப்பண செலவீனங்கள் | - | - |
| **நிகர கட்டுப்பண மற்றும் தரகு வருமானம்** | 4,364,084 | 3,172,420 |
| வர்த்தகத்தின் நிகர இலாபம்/ (நட்டம்) | (656) | 1,391,254 |
| ஏனைய செயற்படும் வருமானம் (தேறியது) | 2,960,030 | 1,140,294 |
| **மொத்த செயற்பாடு வருமானம்** | 171,023,423 | 164,198,554 |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் சம்பந்தமான இழப்பீட்டுக் கட்டணம் | (11,813,583) | (116,444,776) |
| **தேறிய செயற்பாடு வருமானம்** | 159,209,840 | 47,753,778 |
| **செயற்பாடு செலவினம்** | | |
| சொந்தச் செலவினம் | (43,370,859) | (41,037,310) |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள், உபகரணங்களின் தேய்மானம் | (7,938,976) | (8,170,769) |
| அருவச் சொத்து பெறுமதி தீர்ப்பு | (793,854) | (791,685) |
| ஏனைய செயற்பாடு செலவினங்கள் | (60,351,189) | (70,639,813) |
| **நிதிச் சேவைகளின் வற் வரிக்கு முன்னரான செயற்பாடு இலாபம்** | 46,754,962 | (72,885,799) |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | (8,332,942) | - |
| இலாபம்/(நட்டம்) செயற்பாடுகளின் வரிக்கு முந்திய இலாபம் | 38,422,020 | (72,885,799) |
| (ஏற்பாடு)/மீள்தல் - வருமானத்தின் மீதான வரி | (3,456,047) | 28,145,030 |
| **ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்)** | **34,965,973** | **(44,740,769)** |
| **ஏனைய ஒன்றுதிரட்டிய வருமானம்/(செலவினம்)** | | |
| **ஏனைய ஒன்றுதிரட்டிய வருமானம்/(செலவினம்) இலாபம் அல்லது நட்டத்தில் குறிப்பிடாதவை** | | |
| ஓய்வூதிய அனுகூல செயற்பாடுகளில் அசல் இலாபம்/(நட்டம்) | 440,903 | (244,814) |
| **ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம்/(செலவினம்) வரி நீங்கலாக** | 440,903 | (244,814) |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்/(செலவினம்)** | **35,406,876** | **(44,985,583)** |
| **ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் (ரூபா)** | 1.55 | (1.99) |

## நிதி நிலைமை சம்பந்தமான அறிக்கை
**2016 மார்ச் 31 இல் இருந்தவாறு**

| | 2016 ரூபா. | 2015 ரூபா. |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 75,829,061 | 55,332,422 |
| நிதித்துறை முதலீடுகள் - வர்த்தகத்திற்கானது | 700 | 1,356 |
| கடன்களும் முற்பணங்களும் | 1,037,098,925 | 660,344,346 |
| குத்தகை வாடகைகள் பெறுகையும் வாடகைக்கான பொருட்களும் | 132,126,602 | 193,936,429 |
| நிதித்துறை முதலீடுகள் - விற்பனைக்கானவை | 56,300 | 56,300 |
| நிதித்துறை முதலீடுகள் - முதிர்வுக்கானவை | 72,294,832 | 20,989,927 |
| நிதித்துறை முதலீடுகள் | 16,602,880 | 62,917,381 |
| ஏனைய நிதித்துறைச் சொத்துக்கள் | 83,843,230 | 292,286,542 |
| பதிவேடுகள் - காணி சொத்து இருப்பு | 2,607,728 | 8,031,216 |
| ஏனைய நிதிச்சொத்துக்கள் அல்லாதவை | 17,850,907 | 16,194,439 |
| ஆதனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் | 22,272,282 | 16,904,913 |
| அருவச் சொத்துக்கள் | 1,647,606 | 2,441,461 |
| பிற்போட்ட வரிச் சொத்துக்கள் | 27,652,283 | 28,567,521 |
| **மொத்த சொத்துக்கள்** | **1,489,883,336** | **1,358,004,253** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகளுக்குச் சேர வேண்டியவை | 47,225,971 | 10,691,213 |
| வாடிக்கையாளர்களுக்கு சேர வேண்டியவை | 1,105,657,981 | 1,034,978,467 |
| ஏனைய நிதித்துறைப் பொறுப்புக்கள் | 1,614,474 | 2,803,084 |
| ஏனைய நிதித்துறையற்ற பொறுப்புக்கள் | 14,646,113 | 24,407,942 |
| ஓய்வுக்கால நன்மைப் பொறுப்புக்கள் | 1,556,138 | 1,347,764 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,170,700,677** | **1,074,228,470** |
| **பங்குதாரர்களின் நிதியம்** | | |
| அறிவிக்கப்பட்ட மூலதனம் | 225,000,000 | 225,000,000 |
| பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | 86,272,137 | 52,613,560 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | 7,910,522 | 6,162,223 |
| **மொத்தப் பங்குதாரர்களின் நிதியம்** | **319,182,659** | **283,775,783** |
| **மொத்தப் பொறுப்புக்களும் பங்குதாரர்களின் நிதியமும்** | **1,489,883,336** | **1,358,004,253** |
| பொறுப்புக்களும் ஏனைய நிலையல்லா பொறுப்புக்களும் | 15,186,566 | 188,977,816 |
| **ஒரு பங்கிற்கான தேறிய சொத்துக்கள் (ரூபா)** | 14.19 | 12.61 |

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த நிதித்துறை அறிக்கைகள் உள்ளன என்று நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

ஐ.எம் சந்திர பண்டார
நிதித் தலைவர்

இந்த நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கும், சமர்ப்பிக்கப்படுவதற்கும் பணிப்பாளர்களின் சபையே பொறுப்பானது. சபையின் சார்பில் சபைக்கென இத்தால் கைச்சாத்திடுகின்றேன்.

ஜீ.சி.ஏ. டி சில்வா
பணிப்பாளர்

எச்.டீ. கருணாரத்ன
பணிப்பாளர்

2016 மே 30
கொழும்பு